இரவில் 6 மணி நேரம்–பகலில் 4 மணி நேரம்:

விவசாய பம்பு செட்டுகளுக்கு புதிய முறையில் மின் சப்ளை!

இன்றுமுதல் அமுல்: சட்டசபையில் ஆற்காடு வீராசாமி அறிவிப்பு!!

சென்னை, ஜூன். 1- விவசாய பம்பு செட்டுகளுக்கு இரவில் 6 மணி நேரமும் பகலில் 4 மணி நேரமும் தடை இன்றி மின்சாரம் சப்ளை செய்யும் புதிய முறை இன்றுமுதல் அமுலுக்கு வருகிறது. இதை சட்டசபையில் அமைச்சர் ஆற்காடு வீராசாமி அறிவித்தார்.

கடன் வசூல்

விவசாயிகளின் கடன் வசூல் குறித்து சட்டசபையில் நேற்று சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

மின்கட்டண பாக்கி

கே.எஸ்.அழகிரி (தா.மா.கா):- நாராயணசாமி நாயுடு நடத்திய விவசாயிகள் போராட்டத்தின் போது விவசாயிகள் மின்சார கட்டணம் செலுத்த மாட்டோம் என்று அறிவித்தார்கள். அதற்கு இதுவரை 18 சதவிகித வட்டி சேர்ந்து உள்ளது. அசலையும், வட்டியையும் சேர்த்து கட்டும் படி விவசாயிகளிடம் கெடுபிடி நடக்கிறது. அதை செலுத்தாத வர்களுக்கு மின் இணைப்பு துண்டிக்கப்பட்டும் உள்ளது.

அமைச்சர் ஆற்காடு வீராசாமி:- 1-4-79 முதல் மின் கட்டண பாக்கி நிலுவையில் இருந்த 19 ஆயிரத்து 605 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. வட்டியுடன் சேர்த்து அசலையும் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. 31-12-91 வரை பாக்கியை செலுத்த கெடு நீடிக்கப்பட்டது. அதற்குள் 5 ஆயிரத்து 800 பேர் கடனை செலுத்தினார்கள். அவர்களுக்கு மின் இணைப்பு தரப்பட்டது. அதன்பிறகு 2 ஆயிரத்து 224 பேர் பணம் கட்டினார்கள். அவர்கள் பணம் கட்டி 5 ஆண்டு ஆகியும் இன்னும் மின் இணைப்பு தரப்பட வில்லை.

முதல்வர் ஆணை

அந்த பம்பு செட்டுகளுக்கு உடனே மின்இணைப்பு வழங்க முதல்வர் ஆணை பிறப்பித்து உள்ளார். மீதி 10 ஆயிரத்து 971 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு இருக்கிறது. இதுபற்றியும் முதல்வர் விவாதித்தார். செப்டம்பர் 30-க்குள் அவர்கள் கட்டண பாக்கியை செலுத்தி விட்டால் மின் இணைப்பு தர முதல்வர் ஆணையிட்டு உள்ளார். எனவே 3 மாதத்துக்குள் மொத்த கட்டண பாக்கியும் செலுத்தி இணைப்புபெற வேண்டும் என்று விவசாயிகளை கேட்டுக்கொள்கிறேன்.

மின்வெட்டு

99 சதவீத விவசாயிகள் கடந்த ஆட்சியில் மின்வெட்டுக்கு



ஆற்காடு வீராசாமி

உள்ளாக்கப்பட்டார்கள். இரவில் 6 மணி நேரம் பகலில் 4 மணி நேரம் விவசாயத்துக்கு மின்சாரம் வழங்கப்படும் என்று சொல்லப்பட்டாலும் அந்த 10 மணி நேரம் மின்சாரம் கிடைத்ததே இல்லை.

புதிய முறை

எப்போது மின்சாரம் வரும், பம்பு செட்டை ஓட்டலாம் என்று இரவு முழுவதும் விவசாயிகள் காத்து கிடக்காமல் இருக்க ஜூன் 1-ந்தேதி முதல் ஒரு புதிய முறை பின்பற்றப்பட இருக்கிறது.

அதன்படி விவசாய பம்பு செட்டுகளுக்கு இரவு 6 மணி நேரமும், பகலில் 4 மணி நேரமும் மின்சாரம் தரப்படும். எந்த நேரம் எந்த ஊருக்கு மின்சாரம் வரும் என்று முன் கூட்டியே நோட்டீஸ் போர்டில் விளம்பரம் செய்யப்படும். இந்த 10 மணி நேரத்தில் 1 மணி நேரம் குறைவாக மின்சாரம் வந்தாலும் சம்பந்தப்பட்ட அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

கட்ட இயலாது

அழகிரி:- கோரிக்கை நிறை வேறும் வரை விவசாயிகள் மின் கட்டணம் செலுத்த கூடாது என்று நாராயணசாமிநாயுடு சொன்னார். அதை கேட்டு விவசாயிகள் மின்கட்டண பாக்கியை வைத்தார்கள். பிறகு அரசு உறுதியாக சொன்ன போது வசதி உள்ளவர்கள் கட்டினார்கள். ஒரு சாரார் கட்ட இயலாத நிலையில் உள்ளனர். 3 குடங்கு வட்டி கோர்ட்டு கட்டணம் எல்லாம் சேர்த்து ஆயிரம் ரூபாய் கட்டணம் என்று இன்றைக்கு 5000 ரூபாயில் வந்து நிற்கிறது. அவர்களால் இதை கட்ட இயலாது. அவர்களுக்கு அரசு சலுகை தருமாறு அசலையும், வட்டியையும் அரசு தள்ளுபடி செய்யுமா?

தவணை முறையில்

அமைச்சர் ஆற்காடு வீராசாமி:- மின்சார வாரியம் ஏற்கனவே ஆண்டுக்கு 1100 கோடி ரூபாய் இழப்பில் இயங்கி கொண்டு இருக்கிறது. எனவே விவசாயிகளின் மின்கட்டண பாக்கியை மொத்தமாக தள்ளுபடி செய்ய இயலாது என்பதை வருத்தத்துடன் தெரிவித்து கொள்கிறேன். கோர்ட்டு செயலையும் வசூலிப்பதை மட்டும் தள்ளுபடி செய்யலாம். மற்ற அசலையும், வட்டியையும் தவணை முறையில் செலுத்த வாய்ப்பு தரலாம்.

இதை பயன்படுத்தி விவசாயிகள் செப்டம்பர் மாதத்துக்குள் மின்கட்டண பாக்கியை செலுத்தி விட வேண்டாம்.

இவ்வாறு கூறினார்.